முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1545

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.12.2023**, வெள்ளிக்கிழமை

1. அறமெனும் மகா சக்தியே
அன்னதான உயர் சக்தியே
வரம்தந்து மக்களை மீட்பதில்
வல்லமையாக ஆற்றல்புரிகின்ற மாதவசியே
2. தவசியே ஆறுமுக அரங்கனே
தர்மனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அவனியில் ஞான அறிவுரை ஆசி
அருளுவேன் சோபகிருது சிலை திங்கள் தன்னில்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 06 ம் நாள், 22.12.2023, வெள்ளிக்கிழமை)
3. தன்னிலே அரங்கன் ஞானபலம் தான்
தரணிக்கு மாற்றத்தை நிகழ்த்தக்கூடும்
அன்னதானமெனும் அரங்கன் சேவைதான்
அகிலத்தார்க்கு தயவை விதைக்கக்கூடும்
4. கூடவே இந்தவித அற்புதத்தை
குறையிலா உலகோர் அரங்கன் வாழ்
குடிலை நோக்கி வந்து
குருவாக ஏற்று அரங்கன் திருவடி பற்றி
5. திரு அருள்கூட்டும் உயர் தீட்சையாம்
திருவடி ஞான தீட்சை ஏற்று
ஏற்றுமே உலகோர் அரங்கன் காட்டுகின்ற
இணையில்லா அன்னதான சேவையில்
6. ஆற்றல்பட தொண்டு செய்துகொண்டு
அரங்கன் தர்மத்தை அகிலமெங்கும் கிளைகளாக்கி
ஆக்கியே தர்மசாலைகள் நிறுவி
அகிலத்தார் உயர் சேவையாற்றினால்

7. மகிழவே உலகமெங்கும் மாற்றம்
மண்ணுலகில் ஞான யுகமாற்றமாக
மக்களுக்கு மரணத்தை வெல்லுகின்ற
மகா சக்தி எனும் அழியாமை உருவாகி
8. ஆகியே அகிலம் ஞானலோகமாகும்
ஆற்றல்பட ஞான ஆட்சிக்காலமும்
ஆகவும் மாற்றம் காணும்
அருளிய ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–